# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.243/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நாச்சியப்பன் | த–பெ | பழனியப்பன் |
| ஊர்: | : | தேவக்கோட்டை | சமயம்: | |
| வயது: | : | 63/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | அடகு கடை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2025**

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் தேவக்கோட்டையில் வசித்து அடகு கடை வைத்துள்ளேன். தேவக்கோட்டை கீழ பஜாரில் பழனியப்பா பங்கர்ஸ் என்ற பெயரில் நகை அடகு கடை வைத்திருந்தேன். தேதி மாதம் நினைவில் இல்லை 2014 ம் வருடம் ஒருநாள் சண்முகசுந்தரம் மகன் கணேசன் என்பவர் என்னிடம் வந்து 39 கிராம் எடை கொண்ட செயினை என்னிடம் கொடுத்துவிட்டு 94000 ரூபாய் பணத்தை பெற்று சென்றார். மூன்றுமாதம் கழித்து மேற்படி கணேசனை போலீசார் எனது கடைக்கு அழைத்து வந்தார்கள். அந்த நகை திருட்டு நகை என்று சொன்னார்கள். அந்த நகையை நான் போலீசாரிடம் கொடுத்துவிட்டேன். இது சம்பந்தமாக போலீசார் அந்த சமயத்தில் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரணைசெய்தபோது எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் ஒரு பேப்பர் மேல் மடித்து இருந்தது அதில் ஒரு கையொப்பம் செய்தேன். எத்தனை வழக்கு என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பேப்பரில் என்ன என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் மடித்து இருந்ததால் எனக்கு தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.17 17:32:58 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.243/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜா | த–பெ | செந்தில் குமார வேல் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 49/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ரைஸ்மில் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2025**

**1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிரி ஆஜர்**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ரைஸ்மில் வைத்துள்ளேன். கடந்த 29.10.2013 அன்று நான் எனது கணக்கு பிள்ளை ஜெயக்குமார் என்பவரை இருசக்கர வாகனத்தில் புதுவயல் அரிசி ஆலையில் இருந்து காரைக்குடியில் இருந்த எங்கள் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது சுமார் மாலை 5.00 மணியளவில் ஜெயக்குமாரின் மனைவி அவருக்கு செல்போனில் தொடர்பு கொண்டு அவர் பள்ளி விட்டு வீட்டிற்கு சூடாமணிபுரம் சாலை வழியாக சென்று கொண்டிருந்தபோது இரண்டு மர்ம நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து அவரிடம் விலாசம் கேட்பதுபோல் கேட்டு கத்தி போன்ற ஆயுதங்களை காட்டி அவரது கழுத்தில் அணிந்திருந்த தங்க செயினை கொள்ளை அடித்து சென்றதாக சொன்னார்கள். நான் அங்கு தகவலை கேள்விபட்டு காரைக்குடி குற்றப்பிரிவு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொன்னோம். போலீசார் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

எத்தனை பவுன் நகை காணாமல் போனது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த ஆயுதங்களை காட்டி மிரட்டினார்கள் என்றால் தெரியாது. மேற்படி விபரங்கள் யார் சொன்னது என்றால் ஜெயக்குமாரின் மனைவி ஜெயக்குமாருக்கு சொல்லி ஜெயக்குமார் என்னிடம் சொன்னார். ஆகையால் அங்கு என்ன நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய கணக்குபிள்ளை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.17 17:33:04 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி